


# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஏப்ரல் 07, 2022 | புரட்சி 21 | முழக்கம் 12 | விலை: ரூ.3.00


# திராவிடன் மாடல்: ஆரிய–திராவிடர் போராட்டத்தின் புதிய வடிவம்

*இந்த நாட்டின் அரசியல், ஆரிய–திராவிடர் போராட்டமேயாகும் என்று பெரியார் சுட்டிக் காட்டினார். அதுவே ‘திராவிடன் மாடல்’, ஆர்.எஸ்.எஸ். மனுவாதத்துக்குமான போராட்டமாக பரிணமித்து இருக்கிறது என்பதை திராவிடர் விடுதலைக் கழகம் (தி.வி.க.) சுட்டிக்காட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஏப்.2, 3 தேதிகளில் ஈரோட்டில் முறையே தி.வி.க. தலைமைக் குழுவும் செயலவையும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை யிலும் நடந்தது. இரண்டாம் நாள் (ஏப்.3, 2022) ஈரோடு கே.கே.எஸ்.கே. மண்டபத்தில் நடை பெற்ற செயலவைக் கூட்டத்தில் தீர்மானங்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்தார். 90 உறுப்பினர்களில் 86 பேர் பங்கேற்றனர். அதில் நிறைவேற்றப்பட்ட ‘திராவிடன் மாடல்’ குறித்த தீர்மானம்:*

- திராவிடர் விடுதலைக் கழக தலைமைக் குழு உறுப்பினரும், கழகத்தின் செயல்வீரரும் எளிய முறையில் தோழர்களுடன் பழகி கழகக் கொள்கைகளை பரப்புவதில் முன்னின்று செயல்பட்ட மடத்துக்குளம் மோகன் மற்றும் பெரியாரிய அம்பேத்கரிய சிந்தனைகளை தனது புரட்சிகரமான ’விடுதலைக்குரல்’ வழியாக ’இசைப்போர்’ நடத்திய தலித் சுப்பய்யா என்று அறியப்பட்ட லெனின் சுப்பய்யா மறைவிற்கு இந்த செயலவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

- “புராண காலத்திலிருந்து இந்த நாட்டில் நடப்பது அரசியல் போராட்டமல்ல, ஆரிய திராவிடப் போராட்டம் தான்” என்றார் பெரியார். தமிழ்நாட்டில் காலூன்றத் துடிக்கும் பார்ப்பன சனாதன சக்திகள் தொடர்ச்சியாக, பல்வேறு சூழ்ச்சிகளோடு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆனாலும் அவர்களால் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு, ஆட்சியிலிருந்த அ.இ.அ.தி.மு.க.வின் வலிமை யற்றத் தலைமையைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, பல ஆண்டு காலம் தமிழ்நாட்டை “ஆட்டி வைத்த” பார்ப்பனிய சக்திகள், திமுக ஆட்சிக்கு வந்துவிடாமல் தடுக்கும் அத்தனை திரைமறைவு முயற்சிகளையும் மேற்கொண்டு அதிலும் தோற்றுப்போயின. திமுக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தவுடன் ஒன்றிய சனாதன ஆட்சியின் மனுவாதத் திட்டங்கள் நெருக்கடிக்கு உள்ளாயின.

  “திராவிடன் மாடல்” என்பதே திமுக வின் கொள்கை என்று திட்டவட்டமாக அறிவித்த திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின், அதை நோக்கித் தீவிரமான திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

  இந்த வரலாற்றுப் பின்னணியில் பெரியார் சுட்டிக்காட்டிய ஆரிய திராவிடப் போராட்டம் என்பது இப்போது திராவிடன் மாடலுக்கும் ஆர்.எஸ்.எஸ் சனாதன ஆரியத்துக்குமான போராட்டமாக வடிவம் பெற்று நிற்கிறது. திராவிடன் மாடல் தனக்கான கல்வி, மருத்துவம்,பெண்கள் முன்னேற்றம், தன்னுரிமை, மொழி, தொழில், மற்றும் நிதிக் கொள்கைகளைக் கட்டமைத்து உருவாக்கி ஒற்றை இந்தியா என்ற பார்ப்பனிய சூழ்ச்சிக்கு எதிராக தமிழ்நாட்டைக் கட்டி எழுப்பும் முனைப்புகளில் முன்னேறி வருகிறது. இந்த வளர்ச்சிகளை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கில் தனது முழுமையான அதிகார பலத்தையும் ஒன்றிய பார்ப்பனிய ஆட்சி தமிழ்நாட்டின் மீது செலுத்தி திராவிட மாடலை முறியடிக்க முயலுகிறது.

  இறையாண்மை கொண்ட தமிழ்நாட்டு சட்டமன்றத் தீர்மானங்களை, ஆளுநரைப் பயன்படுத்தி முடக்கும் அப்பட்டமான சட்ட மீறல்கள் அரங்கேறி வருகின்றன. வேத காலத்தில் தொடங்கி தொடரும் இந்தப் போராட்டத்தை முறியடிக்க வேண்டிய தேவையும் அவசியமும் எழுந்து நிற்கிறது. தமிழின உணர்வாளர்கள் இந்தப் போராட்டத்தில், வரலாற்று சமூக அரசியல் வெளிச்சத்தில் புரிந்துகொண்டு கட்சி வேறுபாடின்றி தமிழ்நாடு அரசின் திராவிட மாடலுக்கு ஓர் அணியாய் திரண்டு ஆதரவு தர வேண்டும் என்று இந்த செயலவை அறைகூவல் விடுக்கிறது.




**தமிழ்நாட்டின் சுயமரியாதை தனித்துவத்துக்கு உறுதியாகக் குரல் கொடுக்கும் தமிழக முதல்வருக்கு கழகம் பாராட்டு**

- பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17ஐ அரசே சமூக நீதி நாளாக அறிவித்து, அரசு ஊழியர்களை சமூக நீதி நாள் உறுதிமொழி எடுக்க வைத்தது ; அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் திட்டத்தை செயல்படுத்தியது; தமிழ் வழிபாட்டிற்கு முன்னுரிமை ; தமிழ்நாட்டிற்கு தனியான கல்விக் கொள்கை; ’நீட்’ - இலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு பெற தொடர் முயற்சிகள்; மருத்துவப் மேற் பட்டப்படிப்பில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு நிலைநாட்டிட சட்டப் போராட்டம் நடத்தி அனைத்து மாநிலங்களுக்கும் சமூக நீதியை மீட்டுத் தந்தது; தமிழ்நாடு அரசுப் பணிகளில் தமிழ் பயின்றவர்களே வரமுடியும் என்ற சமூக நீதி ஆணை; தாலிக்கு தங்கம் என்ற ஊழலையும், பெண்ணடிமையையும் நிலை நிறுத்தும் திட்டத்திற்கு மாற்றாக, அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு கல்லூரிப் படிப்பு வரை மாதம் 1000 ரூபாய் உதவித் தொகை; மக்களைத் தேடிச் செல்லும் மருத்துவம் மற்றும் கல்வி வழங்கும் திட்டங்கள்; திறன் மேம்பாடும் தொழில் நுட்பமும் நிறைந்த இளைஞர் சமூகத்தை உருவாக்கிட “நான் முதல்வன்” என்றத் திட்டம்; தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கட்டமைப்புகளை மேம்படுத்த முதலீடுகளைத் திரட்டும் முயற்சி; பொருளாதாரத் துறை நெருக்கடியில் பரிதவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து மருந்து, உணவுப் பொருள்களை அனுப்பிட அனுமதிக்க வேண்டும் என்று பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை; குடி அரசு தின அணி வகுப்பில் தமிழக ஊர்திகள் புறக்கணிப்புக்கு சுயமரியாதை உணர்வோடு காட்டிய முதல்வரின் எதிர்ப்பு; கூடங்குளம் அணுக் கழிவுகளை, ஒப்பந்தப்படி இரஷ்யாவிற்கே அனுப்ப வேண்டும் என்ற அடுக்கடுக்கான திட்டங்கள், கோரிக்கைகளோடு தமிழ்நாட்டை தென்கிழக்கு ஆசிய நாடுகளில் முதலிடத்தில் கொண்டுவர அயராது பணியாற்றும் தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு முதல்வரையும் இச்செயலவை பாராட்டி மகிழ்கிறது.

**ஜாதி ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம்**

- ஜாதி ஆணவப் படுகொலைகள் தொடர்ந்து நீடிப்பதோடு தற்போதைய சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி ஜாதி வெறிக் குற்றவாளிகள் தப்பி விடுவதைத் தடுக்கவும், ஜாதி இல்லாத தமிழ்நாட்டை உருவாக்கவும் ஜாதி ஆணவப் படுகொலைகள் தடுப்புச் சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்ற நீண்ட கால கோரிக்கைக்கு செயல் வடிவம் தர தமிழ்நாடு அரசு முன் வர வேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்து

(4ஆம் பக்கம்)

## “நமக்கான அடையாளம் – திராவிடன் மாடல்” : மண்டல மாநாடுகளுக்கு பொறுப்பாளர்கள் நியமனம்

ஈரோடு தி.வி.க. செயலவை - மண்டல மாநாடுகளுக்கு கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை நியமித்துள்ளது. கழகத் தலைவர் செயலவையில் இதை அறிவித்தார்.

30.04.2022 சனிக்கிழமை – சென்னை

02.05.2022 திங்கள் கிழமை – விழுப்புரம்

04.05.2022 புதன் கிழமை – மயிலாடுதுறை

06.05.2022 வெள்ளிகிழமை – தஞ்சாவூர்

06.05.2022 வெள்ளிக்கிழமை – சேலம்

07.05.2022 சனிக்கிழமை – திருச்சி

09.05.2022 திங்கள் கிழமை – ஈரோடு

10.05.2022 செவ்வாய் கிழமை – வேலூர்

11.05.2022 புதன் கிழமை – கோவை

13.05.2022 வெள்ளி கிழமை – மதுரை

14.05.2022 சனி கிழமை – தூத்துக்குடி

மாநாட்டிற்கான பொறுப்பாளர்கள் :

தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, குமரி : மாசிலாமணி, குறுப்பலாய்பேரி

மதுரை, சிவகங்கை, தேனி : மா.பா மணியமுதன்

திருச்சி, பெரம்பலூர், அரியலூர் : மனோகரன், தாமோதரன்

தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை : சாக்கோட்டை இளங்கோ, பேராவூரணி திருவேங்கடம், பாரி

மயிலாடுதுறை, நாகை, கடலூர் : மகேஷ், இளையராஜா

கோவை, திருப்பூர், திண்டுக்கல் : நிர்மல்குமார்

ஈரோடு, நாமக்கல், கரூர் : முத்துப்பாண்டி, சரவணன்,

சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி : கோவிந்தராஜ், டேவிட்

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை : இராமர், இளையரசன்,

வேலூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, திருப்பத்தூர்: திலீபன், சிவா

சென்னை : உமாபதி

**தலையங்கம்**

## செயலவை முடிவுகளை செயல்படுத்த, தயாராவோம்!

*திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு மற்றும் செயலவைக் கூட்டங்கள் ஏப். 2, 3, 2022 தேதிகளில் ஈரோட்டில் சிறப்புடன் நடைபெற்றது. தமிழ்நாடு முழுதுமிருந்தும் கழகப் பொறுப்பாளர்கள் ஆர்வத்துடன் திரண்டிருந்தனர். தலைமைக் குழு கூட்டம் ஏப்.2ஆம் தேதி காலை 11 மணியளவில் ஈரோடு கொல்லம்பாளையம் ‘பிரியாணி பாளையம்’ அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. 16 தலைமைக் குழு உறுப்பினர்களில் 15 தோழர்கள் பங்கேற்றனர். கொரானா காலத்தில் இயக்கம் பொது வெளியில் செயல்பட முடியாத நிலையில் தொடர்ந்து இணையம் வழியாக நிகழ்ச்சிகளை நடத்தி வந்தது. கொரானா ஓரளவு விடுபட்ட நிலையில் அடுத்தக்கட்ட செயல்பாடுகளை தீவிரமாக முன்னெடுப்பது குறித்தும் தமிழ்நாட்டில் மதவாத பார்ப்பன சக்திகள் காலூன்ற தீவிரமான முயற்சிகளில் ஒன்றிய ஆட்சியின் பணபலம் அதிகார பலத்துடன் களமிறங்கி செயல்படுவதையும் தலைமைக்குழு ஆழமாக விவாதித்தது. குறிப்பாக இந்தியாவிலேயே ‘திராவிடன் மாடல்’ என்ற கோட்பாட்டை முன்னிறுத்தி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியும் முதல்வரும் திராவிடர் இயக்கக் கொள்கைப் பார்வையோடு சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்கள் தமிழ்நாட்டை திராவிடர் கோட்பாட்டு நிலமாக உறுதிப்படுத்தி விடும் என்று சமூக ஆதிக்கச் சுரண்டல் சக்திகளான பார்ப்பனர்கள் பதறுகிறார்கள். அவர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் செயல்பட்டு வரும் திராவிடக் கொள்கை அடையாளமான அ.இ.அ,.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. நடத்தும் எதிர் அரசியலை முறியடிக்க வேண்டிய வரலாற்றுக் கடமை திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு இருப்பதையும் உறுப்பினர்கள் கவலையுடன் பகிர்ந்து கொண்டார்கள்.*

*திராவிட நாடு கோரிக்கையில் தொடங்கிய திராவிடம், திராவிட தேசியம், தனித்தமிழ்நாடு மாநில சுயாட்சி என்று தகவமைத்துக் கொண்டு ‘திராவிடன் மாடல்’ என்று உருத்திரட்சிப் பெற்றுள்ளது. அரசு நிர்வாகக் கட்டமைப்பிலும் பண்பு மாற்றங்களைக் கொண்டு வரும் ‘எதிர் நீச்சல்’ முயற்சிகளில் தமிழக முதல்வர் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். இந்த மாற்றங்களை நோக்கி தமிழநாடு நகரத் தொடங்கி விட்டால், அதன் தாக்கம் ஏனைய மாநிலங்களில் எதிரொலிக்கத் தொடங்கி தங்களின் ‘ஒற்றையாட்சி’ ராமராஜ்ய திட்டங்களுக்கு சவாலாகி விடும் என்று ஒன்றிய ஆட்சி அஞ்சுகிறது.*

*தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள், புறக்கணிக்கப்படும் மைனாரிட்டிகள் உள்ளடங்கிய திராவிடர் சமூகத்தின் விளிம்பு நிலை மக்களை சமுத்துவமான சுயமரியாதையுள்ள சமூகமாக்க பெரியார் தொடங்கி வைத்தப் போராட்டத்தின் களங்கள் கூர்மையடைந்து வருகின்றன. இதை மேலும் கூர்மையாக்கிட கட்சிகளைக் கடந்த வலிமையான வரலாற்று அணியை உருவாக்குவது காலத்தின் தேவையாகியிருக்கிறது. மதவெறி அடையாளங்களோ, ஜாதியப் பெருமிதங்களோ, கடவுள் தீர்த்து வைத்து விடுவார் என்ற நம்பிக்கையோ, மக்களின் வாழ்வுரிமைக்கான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போவதே இல்லை என்பது மக்களுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. கொரானா காலத்திலேயே இதைப் பார்த்தோம். வழிபாடுத் தலங்களை மூடினாலும் பரவாயில்லை; நோய்க்கு மருந்து எப்போது கண்டு பிடிப்பார்கள் என்பதற்குத் தான் மக்கள் காத்திருந்தார்கள். அறிவியல்தான் அதை சாதித்தது.*

*‘திராவிடன் மாடல்’ என்ற அடையாளச் சொல்லுக்குள் தமிழ்நாட்டின் சுயமரியாதை மற்றும் சமூக நீதியை உள்ளடக்கிய உரிமைகளும் அடையாளங்களும் அடங்கியிருப்பதை மக்கள் மன்றத்தில் தெளிவாக்க தமிழகம் தழுவிய பரப்புரைப் பயணத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகம் திட்டமிட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் பொருளாதாரக் கொள்கைகள்; மறுக்கப்படும் சமூகநீதி; திணிக்கப்படும் நீட்; ஆளுநரின் அத்துமீறல்; பறிக்கப்படும் கல்வி உரிமை; மக்களை திசை திருப்ப திணிக்கப்படும் மத அடையாளம்; அதற்கு கருவிகளாகப் பயன்படுத்தும் அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்தப் பரப்புரையை கழகம் மேற்கொள்ளவிருக்கிறது.*

*ஏப்.30 இல் தொடங்கி மே 14 நிறைவடையும் பயணத்தில் 11 மண்டல மாநாடுகளும் மாநாடுகளை முன்னிறுத்தி அந்தந்தப் பகுதிகளில் 400க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட்டங்களையும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வாய்ப்புள்ள பகுதிகளில் இணைந்து செயல்படக்கூடிய தோழமை அமைப்புகளையும் இந்தப் பரப்புரையில் பங்கேற்கச் செய்யும் முயற்சிகளில் தோழர்கள் ஈடுபட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பரப்புரைக்கான வெளியீடுகள், துண்டறிக்கைகள் பல்லாயிரக்கணக்கில் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ‘திராவிடன் மாடலுக்கு’ வலுசேர்க்கும் இளைஞர்களின் அணியைக் கட்டமைத்து, தடைகளைத் தகர்த்து ‘தமிழ்நாடு’ தனக்கே உரிய அடையாளத்தோடு முன்னேறிச் செல்ல பாதை அமைப்பதும் அதற்கு மக்களை குறிப்பாக இளைஞர்களை கட்சி மாறுபாடின்றி அணியமாக்குவதுமே இதன் இலக்கு.*

*தோழர்களே தயாராவீர்!*

# துப்பாக்கி ‘ரவை’களை ஜேம்ஸ்வாட் கனவில்தான் கண்டுபிடித்தாரா?

**எட்வின் பிரபாகரன்**

*‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடு கிறோம்.*

**புதிர் 3:** *கனவுகள், அறிவியல் கண்டு பிடிப்புகளின் அடிப்படையாக இருந் துள்ளன. Benzene மூலக்கூற்றின் வடிவத்தை ஃப்ரடரிக் வோன் தன் கனவிலேயே முதலில் கண்டார். நரம்பு அதிர்வுகள் மின்சக்தியாக கடத்தப்பட வில்லை; ரசாயன மாற்றங்களாகத் தான் கடத்தப்படுகின்றன என்று ஒட்டோ லூயி கண்டுபிடித்ததும் கனவில் தான். தையல் இயந்திரத் தின் வடிவமைப்பு, எலியஸ் ஹோவேயின் கனவில் தான் முதலில் வந்தது. துப்பாக்கி ரவை செய்யும் தொழில் நுட்பத்தை ஜேம்ஸ் வாட் கனவாகக் கண்டார். இத்தகைய கனவு களுக்கு அறிவியலில் விளக்கம் இல்லை.*

**உச்ச நீதிமன்ற நீதிபதியின் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (2)**

**விடை:** *உளவியல் ஆராய்ச்சியாளர் சிக்மண்ட் ஃபிராய்ட், “ஆழ்மனத்தின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் விதமாகவே கனவுகள் வருகின்றன” என்றார். தற்கால உளவியல் ஆராய்ச்சி யாளரான டெயர்ட்ரே பாரெட், மூளையில் ஏற்படும் ரசாயன எதிர்வினை களால் தான் கனவுகள் உருவாகிறது என்று கண்டு பிடித்துள்ளார். இந்த எதிர்வினை களுக்கும், நம்முடைய சிந்தனைகளுக்கும் தொடர் புண்டு. நீண்ட நாட்களுக்கு ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒரு விஞ்ஞானிக்கு, அவருடைய ஆராய்ச்சி யோடு தொடர்புடையவை கனவாக வர வாய்ப்புகள் அதிகம். எனவே ஆராய்ச்சி சார்ந்த சிந்தனைகள் தான் கனவுக்கும், அறிவியல் கண்டுபிடிப்பு களுக்கும் அடிப்படையே தவிர, கனவுகள் கண்டுபிடிப்பு களுக்கு அடிப்படையாகாது. அமெரிக்க அதிபர் கென்னடி யின் கொலையை முன் கூட்டியே கனவில் கண்டதாக கருதப்பட்ட ஜீயேன் டிக்சனுடைய பல கனவுகள் பொய்யாகிப் போயுள்ளன. பார்ப்பனர்களை எதிர்த்தால் நீங்கள் கொல்லப்படுவீர் என்று காந்தியிடமே பெரியார் கூறியதற்கு பின்னால், எந்த தெய்வீக சக்தியும் இல்லை. மாறாக, சமூக, அரசியல் அறிவே இருந்தது. அதைப்போலவே தான் கென்னடியின் மரணத்தை கணிக்க கனவுகள் தேவை யில்லை. அரசியல் அறிவே போதும். கனவுகளில் பெரும்பாலானவை பலிப்ப தில்லை.*

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)


**‘இந்து’ ஏட்டின் கட்டுரை**

# கடவுள்களும் காம்ரேட்களும்

*இந்து கோவில் திருவிழாக்களில் ஆர்.எஸ்.எஸ் ஆதிக்கத்தை முறியடிக்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் இனி அத்தகைய விழாக்களில் பங்கேற்பது குறித்து ஆராய்ந்து வருவதாக சி.பி.அய்.எம் தமிழ் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் பேட்டி ஒன்றில் கூறினார். திராவிடர் விடுதலைக் கழகமும், திராவிடர் கழகமும் இந்த முடிவை மறுபரிசீலனை செய்யக் கோரினர். நோக்கம் சிறந்தது என்றாலும் இந்த செயல் மார்க்சிய தத்துவத்திற்கு முரணானதாக உள்ளது என்று திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சுட்டிக்காட்டியதோடு, இது ஆர்.எஸ்.எஸ் அமைப்பிற்கு வலிமை சேர்க்கும் என்று கருத்து தெரிவித்தார்.*

*மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டு நாள் மாநாட்டிற்குப் பிறகு செய்தி யாளர்களைச் சந்தித்த கே.பாலகிருஷ்ணன், ‘கோவில் வழிபாடு, பூஜை, சடங்குகளில் மார்க்சிஸ்ட் கட்சியினர் நேரடியாக பங்கேற்க மாட்டார்கள்’ என்றும், “கட்சியினுடைய ஆதரவாளர்கள் கோவில் நிர்வாகங்களில் பங்கேற்று, நிகழ்ச்சிகளில் ஈடுபடுவார்கள். கோவிலுக்கு வெளியே நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகளில் மதச்சார்பின்மை கொள்கையை வலியுறுத்தி பிரச்சாரம் செய்யப்படும்” என்றும், ஏற்கெனவே அளித்த பேட்டியிலிருந்து சற்று விலகி விளக்கம் அளித்தார் தோழர் பாலகிருஷ்ணன். மாநாட்டில் தீர்மானங்களாக இது குறித்து ஏதும் நிறைவேற்றப்படவில்லை.*

*இது குறித்து இந்து ஆங்கில நாளேட்டில், (ஏப்ரல் 04,2022 ) அதன் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பி.கோலப்பன், ‘கடவுள்களும் காம்ரேட்களும்’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தில் உயர்ஜாதிக்காரர்களால் கண்டுகொள்ளப்படாத சிறு தெய்வங்களை உயர்த்திப்பிடித்து அதன் வழியாக அம்மாவட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் தன்னை ஒரு வலிமையான சக்தியாக நிலைநிறுத்திக் கொண்டதை கோலப்பன் சுட்டிக்காட்டியிருக்கிறார். கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் பி.சண்முகம் இது குறித்து அளித்த பேட்டியையும் அந்தக் கட்டுரை பதிவு செய்து இருக்கிறது. “தத்துவத்தில் நாங்கள் மாறவில்லை. கேரளாவைப் போல் கோவில் நிர்வாகத்தில் பங்கு பெறலாமா? என்று யோசிக்கிறோம். மேற்கு வங்கத்தில் துர்கா பூஜையில் மார்க்சிஸ்டுகள் நேரடியாகவே பங்கேற்று வருகிறார்கள். இந்துத்துவா சக்திகளை எதிர்கொள்ள இந்த செயல் உத்திகளை தமிழ்நாட்டிலும் பின்பற்றலாமா என்று பரிசீலிக்கிறோம்” என்று கூறுகிறார் தோழர் சண்முகம்.*


...du politics too, is
...r the temple arena, partic...
...e cultural space.
Dravidar Viduthalai Kazhagam leader Viduthalai Rajendran said that the CPI(M) should reconsider its plan. “Do not play into the hands of the RSS and BJP that have a long association with religion because their politics is nothing but religion. They uphold the caste system and spread irrational beliefs. The Sangh Parivar will go out and say that they have succeeded in making the CPI(M) toe their line,” Mr. Rajendran warned.
Whether the CPI(M) will ha...
...ugh elbow room in temple a...
...mains to be seen.

*திராவிடர் இயக்கங்களைப் போல் இந்துக்களையும், இந்து மதத்தையும் புண்படுத்துகிறவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல என்று மக்களிடம் இந்த நடவடிக்கைகளால் புரிய வைக்க முடியும் என்று கம்யூனிஸ்டுகள் நம்புவதாகத் தெரிகிறது. கம்யூனிஸ்டுகளுக்கு இத்தகைய சமரசங்கள் தேவையில்லை.*

*திராவிடர் விடுதலைக் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிபிஅய்எம் இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்கிறார். “நீண்ட காலமாக பாஜக, ஆர்.எஸ்.எஸ் கடவுள், மதத்தோடு நெருக்கமாக இருந்து வருகிறது. மதம் மட்டுமே அதன் அரசில் கொள்கையாகவும் வைத்திருக்கிறது. கடவுள், மதத்தை தன் வசமாக கொண் டிருக்கிறது. இதன் வழியாக ஜாதி அமைப்பை காப்பாற்று வதோடு, பகுத்தறிவிற்கு எதிரான கருத்துக்களையும் மக்களிடம் பரப்பி வருகிறார்கள். இந்தப் பிரச்சினையில் இவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது. பயன் ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளுக்குத் தான் போய்ச் சேரும். அது மட்டுமின்றி, “மார்க்சிஸ்டுகள் இவ்வளவு காலமாக நாங்கள் பேசிய கொள்கைக்கு திரும்பிவிட்டார்கள். அதில் நாங்கள் வெற்றி பெற்று விட்டோம்" என்று ஆர்.எஸ்.எஸ், பாஜக வினர் தங்களுக்குக் கிடைத்த வெற்றியாக பேசத் தொடங்கி விடுவார்கள். எனவே மார்க்சிஸ்டுகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்” என்று கூறுகிறார் விடுதலை இராசேந்திரன்.*

*‘கோவில் நடவடிக்கைகளில் பங்கெடுத்து, அதனை ஆர்.எஸ்.எஸ், பாஜக விடமிருந்து விலக்கி தன் வயமாக்கிக் கொள்ளும் வலிமை தமிழ்நாடு மார்க்சிஸ்டுகளுக்கு இருக்கிறதா ? என்பது இனிமேல் தான் தெரியும்’ என்று கட்டுரையை முடிக்கிறார் கோலப்பன்.*

## ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துகிறார் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம்

# நாய் வாலை வெட்டி, ‘நாய்க்கு’ சூப் தயாரிக்கும் ஒன்றிய ஆட்சி

*மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கான செலவுகளை மக்களிடமிருந்தே வரியாக வாரிச் சுருட்டும் மோடி ஆட்சி. ‘கோடீஸ்வரர்கள்’ மேலும் கொழுக்க வரிச் சலுகை வாரி வழங்கி, அவர்களை ‘இந்துத்துவா’வுக்குப் பா.ஜ.க. வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதை ப. சிதம்பரம் விளக்குகிறார்.*

வரிகள், நல்வாழ்வு, தேர்தல் வெற்றி ஆகிய மூன்றையும் ஒரே புள்ளியில் இணைக்க வழி கண்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் சூழ்ச்சித் திறனை நாம் பாராட்டியே தீர வேண்டும். தேர்தல் நிதி நன்கொடைப் பத்திரம், சலுகைசார் முதலாளித்துவம், ஊழல் ஆகிய மூன்றையும் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதற்கான புதிய முறை என்கிற திட்டத்தின் மூலம் இணைத்து, இதில் எந்தச் சட்ட விரோதமும் இல்லை எனும் மாயை உருவாக்கியதைப் போலவேதான் முன்னதிலும் செய்திருக்கிறது.

முதல் மூன்று அம்சங்களுக்கு மீண்டும் வருவோம். வரிகள், நல்வாழ்வு, வாக்குகள் பற்றியது அது.

2019 மக்களவை பொதுத் தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள், பொருளாதார அடித்தளக் கட்டமைப்பில் மாறுதல்கள், ஜிடிபி வளர்ச்சிக்குத் தனியார் முதலீட்டை அதிகம் ஊக்குவிக்கும் நடவடிக்கைகள், வேலைவாய்ப்பைப் புதிதாக லட்சக்கணக்கில் உருவாக்கும் செயல்கள், ஏழ்மையை ஒழிப்பதற்கான முயற்சிகள் ஆகிய அனைத்தையும் கிட்டத்தட்ட கைவிட்டுவிட்டது மோடி அரசு. வலுவான பொருளாதார நிர்வாகம் மூலம்தான் அவற்றையெல்லாம் மேற்கொள்ள முடியும்; அதற்குக் கடுமையாக உழைக்க வேண்டும். தேர்தலில் மக்களுடைய வாக்குகளைக் கவர எளிதான மாற்று வழியொன்றை மோடி அரசு கண்டுபிடித்து விட்டது. அதுதான் புதிய நல்வாழ்வு திட்டங்கள்!

‘கோவிட்-19’ பெருந்தொற்று என்கிற நோய் வந்ததால், அரசு தன்னுடைய புதிய நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் முடிந்தது (அரசின் நல்வாழ்வு நடவடிக்கைகள் பரம ஏழைகள், புலம்பெயர்ந்து சென்ற பாட்டாளிகள், தொற்றுநோய்க்குப் பிறகு அரசு அறிவித்த பொது முடக்கத்தால் வேலையிழந்தவர்கள், கட்டாயப்படுத்தி மூட வைக்கப்பட்ட குறு சிறு நடுத்தரத் தொழில் பிரிவைச் சேர்ந்தவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், முதியவர்கள் ஆகியோரை எட்டவே இல்லை என்பது தனிக் கதை அதுவே அரசின் தோல்வியாகவும் பார்க்கப்படுகிறது).

### நியாயமற்ற வரிக் கொள்கை

விரிவான நல்வாழ்வு நடவடிக்கைகள் மூலம் கிடைக்கக்கூடிய அரசியல் தேர்தல் ஆதாயங்களைக் கணக்கிட்டு, மோடி அரசு அதில் கவனம் செலுத்தத் தொடங்கியது. அப்போது ஒரு கேள்வி எழுந்தது, ‘இந்த நல்வாழ்வு திட்டங்களுக்கான நிதியை யாரிடமிருந்து பெறுவது?’

புதிய நல்வாழ்வு நடவடிக்கைகளால் பயனடையப் போகும் ஏழைகளிடமிருந்தே அதற்கான பணத்தை வரியாகப் பெற்றுவிடலாம், இதை அவர்கள்தான் செலுத்த வேண்டும் என்று சிந்தித்ததும் அதைச் செயல்படுத்தியதும்தான் இந்த அரசின் ‘அறிவுக்கூர்மை’யுள்ள செயல்!

சமத்துவமும் நீதியும் நிலவும் சமூகமாக இருந்தால், பெரும் பணக்காரர்களும், பெரிய தொழில் நிறுவனங்களும்தான் அதிக வரிகளைச் செலுத்த வேண்டும் அந்தத் தொகையிலிருந்து ஏழைகளுக்கான நல்வாழ்வு நடவடிக்கைகளுக்குச் செலவுசெய்ய வேண்டும் என்பதே நியதியாக இருக்கும். மோடி அரசு இதற்கு நேர் எதிரான நடவடிக்கைகளையே மேற்கொண்டது: பெரு நிறுவனங்கள் மீதான கார்ப்பரேட் வரி விகிதத்தை 22% - 25% ஆகக் குறைத்தது. புதிய முதலீடுகள் மீது - மிகவும் தாராள மனதுடன் - அதிகபட்சம் 15% தான் வரி என அறிவித்தது. தனி நபர்கள் செலுத்த வேண்டிய அதிகபட்ச வருமான வரியே 30%தான் எனக் குறைத்தது. அந்த வருமான வரி மீது கல்வி சுகாதாரத்துக்கான மேல் வரியையும் அந்தத் தொகையில் 4% என்றே மிதமாக விதித்தது. செல்வ வரி ரத்து செய்யப்பட்டுவிட்டது. சொத்துகளை பிதுரார்ஜிதமாகப் பெறுவதன் மீது வரி விதிப்பது குறித்து அரசு சிந்திக்காமலேயே இருக்கிறது

இப்போது அரசுக்கு வருவாயை அள்ளித் தரும் இரண்டு பெரிய இனங்கள் ‘சரக்கு- சேவை வரி’ (ஜிஎஸ்டி) மற்றும் பெட்ரோல்-டீசல்-சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள்கள் மீதான வரி ஆகியவையே. எரிபொருள்கள் மீதான மத்திய அரசின் உற்பத்தி வரியை, தங்கச் சுரங்கத்துக்கே ஒப்பிடலாம். இங்கே சுரங்கத்தைத் தோண்டும் வேலைகூட அரசுக்கு இல்லை; மக்களே தங்கள் வருமானத்திலிருந்து எரிபொருள்களுக்கான வரியை அன்றாடம் கோடிக்கணக்கில் நிமிடத்துக்கு நிமிடம் கொண்டுவந்து அரசின் காலடியிலேயே கொட்டிவிட்டுப் போகிறார்கள்!

### பகல் கொள்ளையாக வரிவிதிப்பு

மோடி அரசு பதவியேற்ற 2014 மே மாதம் நாட்டில் நிலவிய உற்பத்தி வரி விகிதத்தை, இன்றைக்கு நிலவும் வரி விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது புரியும். அத்தியாவசிய எரிபொருள்கள் மீதான உற்பத்தி வரி மாற்றம் இங்கே தரப்படுகிறது:

**உற்பத்தி வரி (கலால்) ரூபாய் கணக்கில்:**

மே 2014: பெட்ரோல் (லிட்டருக்கு) ரூ.9.20, டீசல் (லிட்டருக்கு) ரூ.3.46. விலை: பெட்ரோல் (லிட்டர்) ரூ.71.41, டீசல் (லிட்டர்) ரூ.55.49, எல்பிஜி (சிலிண்டர்) ரூ.410, பிஎன்ஜி ரூ.25.50, சிஎன்ஜி ரூ.35.20.

இன்றைய நிலவரம்: பெட்ரோல் (லிட்டருக்கு) ரூ.26.90, டீசல் (லிட்டருக்கு) ரூ.21.80. விலை: பெட்ரோல் (லிட்டர்) ரூ.101.81-116.72, டீசல் (லிட்டர்) ரூ.96.07-100.10, எல்பிஜி (சிலிண்டர்) ரூ.949.50-1,000, பிஎன்ஜி ரூ.36.61, சிஎன்ஜி ரூ.67.37-79.49.

2014 மே மாதம் ஒரு பீப்பாய் கச்சா பெட்ரோலிய எண்ணெய் 108 அமெரிக்க டாலர்களாக சர்வதேசச் சந்தையில் விற்ற போதிருந்தே உற்பத்தி வரி விகிதத்தை ஏகமாக ஏற்றிவிட்டது மோடி அரசு. கடந்த மூன்று ஆண்டுகளில் (2019-2021) பீப்பாய் எண்ணெய் விலை சராசரியாக 60 டாலர்கள்தான் இருந்தது.

பெட்ரோலியத் துறையானது உற்பத்தி வரியாக கடந்த ஏழு ஆண்டுகளில் மத்திய அரசுக்குப் பெற்றுத் தந்திருக்கும் தொகையானது கற்பனைக்கு எட்டாத அளவுக்குக் கடுமையாக அதிகரித்திருக்கிறது.

| ஆண்டு | ரூபாய் கோடியில் |
|---|---|
| 2014-15 | 1,72,065 |
| 2015-16 | 2,54,297 |
| 2016-17 | 3,35,175 |
| 2017-18 | 3,36,163 |
| 2018-19 | 3,48,041 |
| 2019-20 | 3,34,315 |
| 2020-21 | 4,55,069 |
| 2021-22 (மதிப்பீடு) | 4,16,794 |
| மொத்தம் | 26,51,919 |

இந்தத் தொகையில் பெரும் பகுதியை டீசல் பம்புசெட்டுகள் டிராக்டர்கள் வைத்திருக்கும் விவசாயிகளும், இரண்டு சக்கர நான்கு சக்கர மோட்டார் வாகன உரிமையாளர்களும், ஆட்டோ டாக்ஸி டிரைவர்களும், அன்றாடம் வேலைக்குச் செல்வோரும், இல்லத்தரசிகளும்தான் வழங்கியுள்ளனர்.

2020-21இல் கோடிக்கணக்கான நுகர்வோர் மத்திய அரசுக்கு எரிபொருள் உற்பத்தி வரியாக ரூ.4,55,069 கோடியை அளித்தபோது (மாநில அரசுகளுக்கு விற்பனை வரியாகத் தரப்பட்டது ரூ.2,17,650 கோடி), இந்தியாவின் 142 பெருங் கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு ரூ.23,14,000 கோடியிலிருந்து ரூ.53,16,000 கோடியாக உயர்ந்தது. கிட்டத்தட்ட ரூ.30,00,000 கோடி உயர்வு!

ஏழைகளையும் நடுத்தர மக்களையும் இப்படி எரிபொருள் வரியாக விதித்து கசக்கிப்பிழிந்து பெரும் தொகையைப் பெற்ற பிறகு அந்தத் தொகையிலிருந்தே மக்களுக்குக் கூடுதல் நல்வாழ்வு திட்டங்களை அமல்படுத்த செலவிட்டது!

2020இல் கூடுதல் நேரடி உதவியாக வழங்கப்பட்டது என்பதை இனவாரியாக நாம் கணக்கிடலாம். விலையில்லா உணவு தானியங்களுக்காக வழங்கப்பட்டது இரண்டு ஆண்டுகளில் ரூ.2,68,349 கோடி, மகளிருக்கு ஒரே தவணைத் தொகையாக அளித்தது ரூ.30,000 கோடி, ஆண்டுக்கு விவசாயிகளுக்கு ரூ.6,000 என்ற வீதத்தில் ஆண்டுக்கு அளித்தது ரூ.50,000 கோடி. இவை போக வேறு சில நேரடி ரொக்க உதவித் திட்டங்களும் சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றையெல்லாம் கூட்டினால் ஆண்டுக்கு ரூ.2,25,000 கோடிக்கு அதிகமில்லை. மத்திய அரசு மட்டுமே வசூலித்த எரிபொருள் வரி வருவாயைவிட இது மிகவும் குறைவு.

அதனால்தான் சொல்கிறேன், ஏழைகளுக்கான நல்வாழ்வுத் திட்டச் செலவுகள் என்றால் அதற்கான நிதியை ஏழைகளிடமே வசூலித்ததுதான் இந்த அரசின் சாமர்த்தியம். அதேவேளையில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கையும் அவர்களுடைய வருமானமும் சொத்து மதிப்பும் கணக்கில் அடங்காமல் பல மடங்காகப் பெருகிக் கொண்டிருக்கிறது!

# இலங்கைப் பொருளாதார நெருக்கடிக்கு என்ன காரணம்?

***கடுமையான நெருக்கடியில் சிக்கியிருக்கிறது இலங்கைப் பொருளாதாரம். இப்போதைய நெருக்கடிக்குக் காரணங்கள் என்ன, இத்தகு நிலையை நோக்கி அதைத் தள்ளியவர்கள் யார்? இதையெல்லாம் அடையாளம் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.***

21ஆம் நூற்றாண்டில்கூட இலங்கையின் பொருளாதார எதிர்காலம் தேயிலை, ரப்பர், ஏலம், மிளகு உள்ளிட்ட வாசனைத் திரவியங்கள், ஆடைகள் ஆகியவற்றின் ஏற்றுமதியைச் சுற்றியே தொடர்ந்து பிணைந்திருக்கிறது. தேயிலை ரப்பர் போன்ற பிரதான பொருள்களின் ஏற்றுமதி, சுற்றுலா மூலம் கிடைத்த வருமானம், வெளிநாடுவாழ் இலங்கையர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பிவைத்த வருமானம் ஆகியவற்றின் மூலமே அது தனக்குத் தேவைப்பட்ட அன்னியச் செலாவணியைப் பெற்றுவந்தது. அந்த அன்னியச் செலாவணியைக் கொண்டுதான் உணவு தானியம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளை இறக்குமதி செய்துகொண்டது.

இருபத்தாறு ஆண்டுகள் ஈழத் தமிழர்களின் உரிமைப் போர் 2009இல் இராணுவ ஒடுக்குமுறையில் முடிவுக்கு வந்ததும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி புத்துயிர் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி நடக்கவில்லை.

2013-க்குப் பிறகு உலக அளவில், பண்டங்களுக்கான சந்தை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் இலங்கையின் பொருளாதாரமும் வீழ்ந்தது, ஏற்றுமதி மந்த கதியை அடைந்தது, இறக்குமதி அதிகரித்தது.

இந்தச் சூழலில்தான், அரசின் நிதிநிலைப் பற்றாக்குறையானது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 5%-க்கும் குறைவாக 2011-க்குள் கட்டுப்படுத்தப்படும் என்கிற உறுதிமொழியின் பேரில் 2009இல் பன்னாட்டுச் செலாவணி நிதியம் கடன் கொடுத்தது.

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்காமலும் ஏற்றுமதி உயராமலும், அன்னியச் செலாவணி கையிருப்பு தொடர்ந்து கரைந்துவந்த வேளையில்தான் ஐக்கிய தேசியக் கட்சி (யுஎன்பி) தலைமையிலான கூட்டணி அரசு 150 கோடி அமெரிக்க டாலர்கள் கடன் கேட்டு பன்னாட்டுச் செலாவணி நிதியத்தை 2016இல் அணுகியது. இந்தக் கடனை 2016 முதல் 2019 வரையில் தருமாறு கோரியது. 2020-க்குள் அரசின் வருவாய்க்கும் செலவுக்குமான பற்றாக்குறை அளவு ஜிடிபியில் 3.5% அளவாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பன்னாட்டுச் செலாவணி நிதியம் பல்வேறு நிபந்தனைகளை விதித்தது.

செலாவணி நிதியம் விதித்த நிபந்தனைகளால் இலங்கையின் பொருளாதார நிலை மேலும் மோசமானது. 2015இல் 5%-ஆக இருந்த ஜிடிபி 2019இல் 2.9%-ஆகக் குறைந்தது. 2015இல் 31.2%-ஆக இருந்த முதலீட்டு விகிதம் 2019இல் 26.8%-ஆக சரிந்தது. 2015இல்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# செயலவையில் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா தொகையாக வரவு ரூ. 1,12,950/-

'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்காக 'சந்தா' கணக்குகளை முடித்து, கோவை, ஈரோடு (தெற்கு), மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, தூத்துக்குடி, நாமக்கல், தென்காசி, தர்மபுரி, திருப்பூர், பேராவூரணி, நெல்லை, தோழர்கள் ஏற்கனவே தரவேண்டிய தொகை மற்றும் புதிய சந்தாக்கள் முகவரி இதழ்களின் தொகையைச் சேர்த்து ரூ.1,12,950/-ஐ செயலவையில் வழங்கினர்.

மயிலாடுதுறை மாவட்டத் தலைவர் மகாலிங்கம், தனது பேரனின் ஜாதி மறுப்பு திருமண மகிழ்வாக ரூ.1000/- நன்கொடை வழங்கினார்.

# மு.மீனாட்சி சுந்தரம் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு



தமிழ்நாட்டரசின் 2022 திருவள்ளுவர் விருதாளரும் பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், அனைத்து இந்திய தமிழ்ச் சங்க பேரமைப்பின் தலைவரும், திராவிடர் கழகத்தின் மூத்த கருஞ்சட்டைத் தோழருமான மு.மீனாட்சி சுந்தரம் (முத்து செல்வன்) நினைவேந்தல் நிகழ்வு 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் பெங்களூர் தமிழ்ச் சங்க திருவள்ளுவர் அரங்கத்தில், பெங்களூர் தமிழ்ச் சங்கம் நடத்தியது.

இந்நினைவேந்தல் நிகழ்வுக்கு பெங்களூர் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.கோ. தாமோதரன் தலைமை தாங்கினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மீனாட்சி சுந்தரத்தின் (முத்து செல்வன்) உருவப் படத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிகழ்வில் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்று உரையாற்றினர்.

கருநாடக மாநில திராவிடர் கழகத் தலைவர் சானகிராமன், க.த.ம.இ. தலைவர் சி. இராசன், பெரியாரிய பொதுவுடமை இயக்கத்தின் அமைப்பாளர் கி.சு. இளங்கோவன், கருநாடக திமுக அமைப்பாளர் இராமசுவாமி, உ.த.க. தலைவர் மதலைமணி, மைசூர் தமிழ்ச் சங்கத் தலைவர் பிரான்சிஸ், கருநாடக அதிமுக செயலாளர் எஸ்.டி. குமார், பெங்களூர் தமிழ்ச் சங்க முன்னாள் செயலாளர் இராம சுப்ரமணியன், பெங்களூர் தமிழ் சங்க செயற்குழு உறுப்பினர் லயன் பத்மநாபன், மீனாட்சி சுந்தரனாரின் மருமகன்கள் ஜெய்சங்கர், மருமகன் சுவாமிநாதன், பெங்களூர் தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் அமுத பாண்டியன், போர்முரசு கதிரவன், கருநாடக தமிழ்ப் பள்ளி மற்றும் கல்லூரி அமைப்பின் பொறுப்பாளர் புலவர் கார்த்தியாயினி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

நினைவேந்தல் கவிதைகளை பாவலர் தமிழடியான், பொதுவுடமைக் கட்சி தோழர் சௌரி ஆகியோர் பாடினர். நிகழ்வைத் தொகுத்து வழங்கியவர் பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர், தி.வி.க. பொறுப்பாளர் இல. பழனி ஆவார்.

இந்நிழ்வை ஏற்பாடு செய்த பெங்களூர் தமிழ்ச் சங்கத்திற்கும், அனைத்து இயக்கத் தலைவர்களுக்கும் மீனாட்சி சுந்தரனாரின் (முத்து செல்வன்) இளைய மகள் பொற்செல்வி நன்றியுரை கூறி நிகழ்வை முடித்து வைத்தார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிறது. ஜாதி, மத மறுப்பு இணையர்களை பாதுகாக்கும் கடமை திராவிடன் மாடல் ஆட்சிக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களை பாதுகாக்கும் தனிப் பிரிவுகள், விடுதிகளை உருவாக்க வேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்துகிறது.

**மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம்**

- சாமியார்கள் மூலம் அப்பாவி மக்கள் ஏமாறுவதும், உடைமைகளை பறிகொடுப்பதும் அதிகரித்து வருகிறது. மக்களின் மூட நம்பிக்கையை மூலதனமாக்கி மக்களை ஏமாற்றும் சாமியார்களைத் தடுத்து நிறுத்தவும், இந்திய அரசியல் சட்டம் குடிமக்களின் கடமையாக வலியுறுத்தும் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்கவும்(51 ஹ (ா), கர்நாடகம், மகராஷ்டிரா மாநிலங்களில் அமலில் இருப்பதைப் போல் "மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம்" ஒன்றை தமிழ்நாடு அரசு கொண்டு வர வேண்டும் என்று இந்த செயலவை கேட்டுக் கொள்கிறது. மக்களிடையே இந்த மூடநம்பிக்கைகளை விளக்கி, அறிவியலையும், பகுத்தறிவையும் பரப்புவதற்கு அரசு ஊக்குவிப்பதும், பிற்போக்குவாதிகளிடமிருந்து வரும் எதிர்ப்புகளை புறம் தள்ளி இந்த பகுத்தறிவு, அறிவியல் பரப்புரைக்கு தடையின்றி உரிய அனுமதி வழங்கிட காவல்துறைக்கு உரிய வழிகாட்டு முறைகளை அரசு வழங்கிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசை இந்த செயலவை கேட்டுக் கொள்கிறது.

**ஜாதிக்குள் வரன் தேடும் வணிக அமைப்புகளுக்கு தடை போடுக**

- ஜாதியற்ற தமிழ்நாட்டை உருவாக்குவதில் தான் தமிழ்நாட்டின் பெருமையும் அடையாளமும் இருக்கிறது. அந்த வகையில் ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்தோருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை கலைஞர் முதல்வராக இருந்த போது அறிமுகப்படுத்தினார். இப்போது ஜாதி அமைப்புகள் சமூக நீதியை புறம்தள்ளிவிட்டு தேர்தல் அரசியலுக்கான வாக்கு வங்கிகளாக ஜாதியைப் பயன்படுத்தி அதன் பெருமைகளைப் பேசி வருவது வன்மையான கண்டனத்திற்கு உரியது. இதற்கு வலிமை சேர்ப்பது போல் ஜாதிக்குள்ளே வரன் தேடும் சில வணிக அமைப்புகள், ஊடகங்களில் ஜாதிக்குள் வரன் தேடும் விளம்பரங்களை வெளியிட்டு வருகிறது. இது போன்ற ஜாதிக்குள் வரன் தேடும் விளம்பரங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்தகைய விளம்பரங்களை ஊடகங்கள் ஒலிபரப்பி சமூகத்தை பின்னோக்கி இழுத்துச் செல்லக் கூடாது என்று செயலவை கேட்டுக் கொள்கிறது.

**ஜாதிச் சான்றிழ்: ஜாதிப் பெயர்களைத் தவிர்த்து வகுப்புப் பெயர்களை மட்டும் பதிவு செய்யலாம்**

- மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஜாதிச்சான்றிதழுக்கு மாற்றாக "இட ஒதுக்கீடு உரிமைச் சான்றிதழ்" அல்லது "வகுப்புச் சான்றிதழ்" (Community) வழங்கி - சான்றிதழ்களில் ஜாதிப் பெயரைத் தவிர்த்து விடலாம் என்று இந்த செயலவை தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது. ஜாதி குறித்த விவரங்கள் வருவாய்த் துறையில் மட்டுமே இருந்தால் போதும்! சான்றிதழ் களில் வேண்டியதில்லை என்பதே இச்செயலவையின் கோரிக்கையாகும்.

# செயலவை உறுப்பினர்கள் ஆண்டுக்கு ரூ. 1000/- நன்கொடை திட்டம்

தி.வி.க. செயலவை உறுப்பினர்கள் ஆண்டுக்கு ரூ.1000/- நன்கொடை வழங்குவது என்று செயலவையில் முடிவெடுக்கப்பட்டது. செயலவை உறுப்பினர்கள் இதற்கு ஒப்புதல் வழங்கியதோடு மூன்று பேர் உடனடியாக நன்கொடையையும் வழங்கிவிட்டனர். இது தவிர கழகத்தின் முழு நேர செயல்பாட்டாளர்களை நியமிக்கும் திட்டமும் பரிசீலிக்கப்பட்டது. இதற்கான செலவை தோழர்கள் பகிர்ந்து கொள்ள முன் வந்தனர். அதன்படி தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், ஆசிரியர் சிவகாமி, இராம இளங்கோவன், நாத்திகஜோதி (ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர்), சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் சேலம் டேவிட் ஆகியோர் முழு நேரப் பணியாளர் நியமன திட்டத்துக்கு மாதம் ரூ.1000/- வீதம், வருடத்துக்கு ரூ.12,000/- வழங்குவதாக அறிவித்தனர்.

திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் முகில்ராசு, காவை ஈசுவரன் முழுநேரப் பணியாளர் திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ.6000/- வழங்குவதாக அறிவித்தனர். நாமக்கல் மாவட்டக் கழக சார்பில் மூன்று செயலவை உறுப்பினர்கள், செயலவை உறுப்பினருக்கான கட்டணமாக ரூ.1000 செலுத்துவதாகவும், முழு நேரப் பணியாளர் திட்டத்துக்கு மூவரும் இணைந்து ஆண்டுக்கு ரூ.7000 வழங்குவதாகவும் அறிவித்தனர். மதுரை மாவட்டம் சார்பாகவும் ரூ.10,000 தருவதாக அறிவித்தனர். கிருட்டிணகிரி மாவட்டத் தலைவர் வாஞ்சிநாதன் முழு நேரப் பணியாளர் திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூ.20,000/- வழங்குவதாக அறிவித்தார்.

## ஏப்.30 தொடங்கி மே 14 வரை 11 மண்டல மாநாடுகள் : 400 தெருமுனைக் கூட்டங்கள் கழக செயலவை முடிவு

தமிழ்நாட்டின் பறிக்கப்படும் உரிமைகள், ஒன்றிய ஆட்சியின் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கை; மறுக்கப்படும் 'நீட்' விலக்குச் சட்டம்; திணிக்கப்படும் மதவெறி; அதற்கு கருவிகளாகப் பயன்படும் மக்களின் மூடநம்பிக்கைகள் ஆகியவற்றை விளக்கி 'திராவிடன் மாடல்' அதுவே நமக்கான அடையாளம் என்பதை விளக்கி, 11 மண்டல மாநாடுகளையும் மாவட்டத்துக்கு குறைந்தது 15 தெருமுனைக் கூட்டங்களையும் நடத்த திவிக செயலவை முடிவு செய்துள்ளது.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

28.8%ஆக இருந்த சேமிப்பு விகிதம் 2019இல் 24.6%-ஆகக் குறைந்தது. 2016இல் அரசின் வருவாய் ஜிடிபியில் 14.1%-ஆக இருந்தது 2019இல் 12.6%-ஆகக் குறைந்தது. அரசின் மொத்தக் கடன் அளவு 2015இல் ஜிடிபியில் 78.5%-ஆக இருந்தது, 2019இல் 86.8% ஆக அதிகரித்தது. இலங்கைப் பொருளாதாரத்துக்கு 2019இல் மேலும் இரண்டு புதிய அதிர்ச்சிகள் ஏற்பட்டன.

முதலாவது, 2019 ஏப்ரலில் ஈஸ்டர் பண்டிகையின்போது கொழும்பு நகரிலும் பிற இடங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களில் நிகழ்ந்த குண்டுவெடிப்புகளால் 253 பேர் உயிரிழந்தனர். இச்செய்தி ஏற்படுத்திய அச்சத்தால் வெளிநாட்டுப் பயணிகள் இலங்கைக்கு சுற்றுலா வருவது வெகுவாக வீழ்ச்சி அடைந்தது.

இரண்டாவது, 2019 நவம்பரில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு தேர்தலில் தோல்வியுற்று ஆட்சியை இழந்தது. கோதபய ராஜபட்ச தலைமை யிலான இலங்கை பொதுஜன பெரமுன (எஸ்எல்பிபி) தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தது. "வரி விகிதங்களைக் குறைப்போம், விவசாயிகளுக்குச் சலுகைகளை அளிப்போம்" என எஸ்எல்பிபி தேர்தலில் வாக்குறுதி அளித்து வெற்றி பெற்றிருந்தது. இந்த வாக்குறுதிகள் இலங்கைக்குக் கடன் கொடுத்த பன்னாட்டுச் செலாவணி நிதியம் விதித்த நிபந்தனைகளுக்கு நேர் எதிரானவை. 2020இல் பரவிய கோவிட்-19 பெருந்தொற்று, அதனால் ஏற்பட்ட பொதுமுடக்கம் காரணமாக பொருளாதார நிலைமை படுமோசமான நிலைக்கு நாட்டைத் தள்ளிவிட்டது.

இலங்கை ஆண்டுதோறும் உர மானியமாக 26 கோடி அமெரிக்க டாலர்களை (ஜிடிபியில் 0.3%) செலவிட்டு வந்தது. பெரும்பாலான உரம் இறக்குமதி மூலம்தான் பெறப்பட்டது. இறக்குமதியால் செலவாகும் அன்னியச் செலாவணிகளை மிச்சப்படுத்த கோத்தபய அரசு - அதேசமயம் மிகவும் விநோதமான முடிவை எடுத்தது. 2021 மே முதல் வெளிநாடுகளிலிருந்து உரம் இறக்குமதிசெய்யப்பட மாட்டாது என்று அறிவித்தது. ஒரே நாளில் இலங்கை முழுவதும் இயற்கை வேளாண்மைக்கு மாறியாக வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது.

ரசாயன உரங்கள் பயன்பாட்டை ஒரேயடியாகக் கைவிட்டுவிட்டு இயற்கை விவசாய முறைக்கு மாறினால் சாகுபடி கணிசமாகக் குறைந்து அத்தியவாசிய உணவுப் பொருள்களுக்கே கடும் தட்டுப்பாடும் விலைவாசி உயர்வும் ஏற்படும் என்று வேளாண் விஞ்ஞானிகள் உள்பட அனைவரும் கோத்தபயவை ஒரே குரலில் எச்சரித்தனர். நெல் சாகுபடியில் 25%, தேயிலைச் சாகுபடியில் 35%, தென்னைச் சாகுபடியில் 30% வீழ்ச்சி அடையும் என்று கூட்டாக அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

பவுத்தத்துடன் சிங்கள பேரினவாதமும் கைகோர்த்தக் காரணத்தால் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை அரசியல் தீர்வு காண மறுத்தது இலங்கை அரசு. அதனால் வெளிநாட்டு முதலீடுகள் குறைந்தன. உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. மதவாதம், தேசிய இனப் பிரச்சினையை ஒடுக்குவதால் நாடே பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுவிடும் என்ற பாடத்தை இலங்கை நெருக்கடி உணர்த்துகிறது. இந்துத்துவா ஆட்சி இதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுமா?

## செயலவைக்கு உதவியோருக்கு நன்றி!

தலைமைக்குழு செயலவை நிகழ்ச்சிகளை அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி முன்னின்று ஒருங்கிணைத்தார். அவருடன் ஈரோடு மாவட்டத் தோழர்கள் இணைந்து பணியாற்றினர். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ரூ.10,000; ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி ரூ.5,000, ஈரோடு சீனிவாசன் ரூ.5000, பொறியாளர் அன்பு செல்வன் ரூ.10,000 ஆகியோர் நன்கொடை வழங்கினர். பிரியாணிபாளையம் ஓட்டல் உரிமையாளரும் கரூர் மாவட்ட கழக முன்னாள் மாவட்ட தலைவருமான பாபு, தலைமைக் குழுவுக்கு இடம் வழங்கி மிகக் குறைந்த விலைச் சலுகையில் இரு நாளும் பிரியாணி உணவு வாங்கினார். சென்னிமலை கழகத் தோழர் ஜோதி ரவி 15 கிலோ இறைச்சியையும், 'அன்பு மிக்சர்' உரிமையாளர் அனைவருக்கும் சிற்றுண்டிகளையும் தின்பண்டங் களையும் வழங்கினார். கே.கே.எஸ்.கே. திருமண மண்டபத்தில் செயலவைக் கூட்டம் இலவசமாக நடத்திக் கொள்ள அனுமதி வழங்கினர். அனைவருக்கும் அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 07th April 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN